**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 128/மா/2021
நாள்: 04.09.2023

திரு. சுந்தர்ராஜ்
மணப்பாறை, திருச்சிராப்பள்ளி – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
வார்டுகுழு அலுவலகம் (IV)
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி
திருச்சிராப்பள்ளி – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மஸ்தான் ரோடு, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சுந்தர்ராஜ் என்பவரின் 29.10.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.11.2021-ல் பெறப்பட்டு 128/மா/2021 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

2. திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், மஸ்தான் ரோடு, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சுந்தர் ராஜ் என்பவரின் 29.10.2021 நாளிட்ட மனுவில்

திருச்சி மதுரை சாலை பஞ்சப்பூரில் ஜெயலெட்சுமி லாரி சர்வீஸ் அருகில் வெல்கேர் மருத்துவமனை இயங்கி வருகிறது. அந்த கட்டிடம் முழுமை பெறாமல் திருச்சி ஆணையர் அவர்களிடம் Completion Certificate பெறாமல் நடைபெற்று வருகிறது. மருத்துவமனை மிகவும் தரமற்றதாக உள்ளது. இந்த மருத்துவமனை எந்தவித வரியும் செலுத்தாமல் நடந்து வருகிறது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. எனவே, தாங்கள் இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

**3. இம்முறைமன்ற கடித நாள் 20.12.2021 வாயிலாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரிடமிருந்து இம்மனுமீது அறிக்கை கோரப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையாளர் தன்னுடைய 19.6.2023 மற்றும் 17.8.23 நாளிட்ட அறிக்கையில் :**

வெல்கேர் மருத்துவமனை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம்-4 வார்டு எண்.62 (முந்தைய பொன்மலைக் கோட்டம் வார்டு எண்.3) மதுரை தேசிய நெடுஞ்சாலையின் தெற்கு பஞ்சப்பூரில் சர்வே எண். 9/10ல் திரு.கே.ராஜேந்திரன் என்பவருக்கு திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமம் மூலம் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49ன் கீழ் ந.க.எண்.170/2016/தி.உ.தி.கு.2 நாள் 13.10.2016ல் திட்ட அனுமதி எண்.47/2016ல் மூன்று வருடத்திற்கு 12.10.2019 வரை நிபந்தனைகளுக்குட்பட்டு கட்டிட அனுமதி வழங்கப்பட்டது

மீண்டும் இக்கட்டிட உரிமையாளர் திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமம் அலுவலகத்திற்கு திருத்திய வரைபடம் சமர்ப்பித்து அனுமதி கோரி விண்ணப்பத்தின் பேரில் திட்ட அனுமதி எண்.21/2018ன் வாயிலாக 09.05.2018 முதல் 08.05.2023 வரை திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இக்கட்டிடத்தை தள ஆய்வு செய்ததில், அனுமதி பெற்ற வரைபடத்திற்கு மாறுதலாக கட்டடம் கட்டப்பட்டு வந்ததால், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994, பிரிவு 282 (1 மற்றும் 2) ன் அறிவிப்பு வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து, கட்டிட உரிமையாளரிடமிருந்து பதில் ஏதும் பெறப்படாததால், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56(2A) மற்றும் 57ன் கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட கடந்த 14.1.23ல் அறிவிப்பு வழங்கப்பட்டது.

கட்டிட உரிமையாளர் 27.1.23 நாளிட்ட கடிதத்தில், கட்டிடத்தின் தூண்கள் போன்றவற்றில் எவ்வித மாற்றமும் செய்யவில்லை என்றும் கனம் குறைவில் குறுக்குச் சுவர்கள் மட்டுமே அமைந்துள்ளதாகவும், தரைத்தளத்தில் வெளிப்புற நோயாளி மருத்துவத்தினை Establishment Act-ன் பதிவு பெற்று பார்த்து வருவதாகவும், பொதுக் கட்டிடத்திற்கான அனுமதியினை விரைவில் பெற்று சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி கட்டிடத் தரைதளத்தின் உட்புறம், அனுமதி பெற்ற வரைபடத்திற்கு மாறுதலாக உள்ளது. மேலும், இக்கட்டிடப் பணி முழுமைபடையாமல் தரைத்தளத்தில் வெளி நோயாளிகள் மருத்துவம் மேற்கொள்ளும் சமயம் கட்டிடப் பணியினால் பொது மக்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதால் கட்டிடப் பணிகள் முழுமையாக முடிவடையும் வரை வெளிப்புற நோயாளிகள் மருத்துவம் பார்ப்பதை உடன் நிறுத்திடுமாறு 10.2.23 அறிவிப்பின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

3.3.23 அறிவிப்பின் வாயிலாக, மேற்படி கட்டிடத்தை மருத்துவமனையாக உபயோகப்படுத்தி வருவதால், இக்கட்டிடத்திலுள்ள அனைத்து பொருட்களுடன் 7 தினங்களுக்குள் வெளியேறுமாறும், தவறினால் இக்கட்டிடத்தை எதிர்வரும் 10.3.23ம் தேதி காலை 09.30 மணிக்கு மூடி முத்திரையிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மனுதாரரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்ட வழக்கின் விசாரணை தொடர்பாக கடந்த 09.3.23 அன்று மாநகராட்சி வழக்கறிஞர் நேரில் ஆஜரானதைத் தொடர்ந்து மாண்புமிகு நீதியரசர் அவர்களால், மனுதாரர் உரிய அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தி கால அவகாசம் வழங்கி சீல் வைக்கும் நடவடிக்கையை 28.4.23ம் தேதி வரை ஒத்தி வைத்து தீர்ப்பளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து கட்டிடத்தினை மூடி முத்திரையிடும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

தற்போது, வெல்கேர் மருத்துவமனை நிர்வாகத்தால் தொடரப்பட்ட வழக்கு இன்று வரை நிலுவையில் உள்ளது என்பதால், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழக்கின் தீர்ப்பு வரப்பெற்றபின் தீர்ப்புரையின் அடிப்படையில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்ட விதிகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

**4. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.08.2023 அன்று மதுரை முகாமில் நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு 14.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

21.08.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை.

**5. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையர் 21.08.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:**

மனுதாரர் குறிப்பிட்டுள்ள திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண் 62 பஞ்சப்பூர் லாரி சர்வீஸ் அருகில் இயங்கி வரும் வெல்கேர் மருத்துவமனையை ஆய்வு செய்ததில், அனுமதி பெற்ற வரைபடத்திற்கு மாறாக கட்டடம் கட்டப்பட்டு வந்ததால் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மூலம் 27.12.2021 அன்று தாக்கீது அனுப்பப்பட்டது. தாக்கீதுக்கான பதில் மருத்துவமனை நிர்வாகத்திலிருந்து பெறப்படாததால் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவுகளின்படி மேற்கண்ட கட்டடத்தை மூடி முத்திரையிட 14.1.2023ல் அறிவிப்பு வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்கண்ட நிகழ்வு தொடர்பாக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் மருத்துவமனை நிர்வாகத்தால் (வழக்கு எண்.(WMP (MD) 4847 of 2023. WP (MD) 5146/2023) தொடரப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை 9.3.2023 அன்று இடைக்கால தடை பிறப்பித்து தற்காலிகமாக Lock and seal நடவடிக்கையை 28.4.2023 வரை நிறுத்திவைக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 17.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் " எனத் தெரிவித்துள்ளார்.

6. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகிறது.

திருச்சி மணப்பாறையைச் சேர்ந்த திரு.S.சுந்தர்ராஜ், திருச்சி மதுரை சாலையில் பஞ்சப்பூரில் ஜெயலெட்சுமி லாரி சர்வீஸ் அருகில் வெல்கேர் மருத்துவமனை கட்டடம் முழுமையாக கட்டப்படாமலும், திருச்சி மாநகராட்சியிடம் அனுமதி பெறாமலும் இயங்கி வருவதாகவும் இது குறித்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சியிடம் புகார் மனு அளித்தும் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லையென தெரிவித்து, தன்னுடைய மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

7. மனுதாரர் 21.08.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகக் கோரி அழைப்பாணை அனுப்பப்பட்டும், தொலைபேசியில் முன் தகவல் தெரிவித்தும், 21.08.2023 அன்று மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகாமல் தவிர்த்ததை இம் முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும், இத்தகைய செயலை மனுதாரர் இனி வரும் காலங்களில் தவிர்த்திடுமாறு இம்முறை மன்றம் அறிவுறுத்துகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள திருச்சிராப்பள்ளி வார்டு எண்.62 பஞ்சபூர் லாரி சர்வீஸ் அருகில் இயங்கிவரும் வெல்கேர் மருத்துவமனை அனுமதி பெற்ற வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டுள்ளதாக 27.12.21 அன்று தாக்கீது வழங்கப்பட்டது என்றும், மருத்துவமனையிடமிருந்து பதில் ஏதும் பெறப்படாத நிலையில் அக்கட்டடத்தை மூடி முத்திரையிட 14.1.23ல் அறிவிப்பு வழங்கப்பட்டது என்றும் அம்மருத்துவமனையின் உரிமையாளர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். (WMP (MD) 4847 of 2023. WP (MD) 5146/2023) தொடரப்பட்டு, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை 9.3.2023 அன்று 28.4.2023 வரை Lock and seal நடவடிக்கையை நிறுத்திவைக்குமாறு இடைக்கால தடை உத்திரவு பிறப்பித்துள்ளதாக திருச்சி மாநகராட்சி உதவி ஆணையர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும், 17.08.23 நாளிட்ட அறிக்கை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம்-4ன் உதவி ஆணையர் இந்நேர்வில் கண்டுள்ள வெல்கேர் மருத்துவமனை நிர்வாகம் தொடந்துள்ள வழக்கு இன்று வரை (17.8.23) நிலுவையில் உள்ளதால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் வழங்கும் தீர்ப்பின் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்ட விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

8. மனுதாரர் 2021ல் வெல்கேர் மருத்துவமனை குறித்து புகார் மனு அளித்தும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 27.1.21 அன்று தாக்கீது அளித்துவிட்டு மீண்டும் இரண்டு வருங்கள் கடந்துதான் 14.1.23 அன்று தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 (2ஏ) மற்றும் 57 ன் கீழ் தாக்கீது வழங்கியது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம்-4ன் அலுவலர்கள் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ல் குறிப்பிட்டுள்ளவாறு, கால அவகாசத்தை பின்பற்றவில்லையென தெரியவருகிறது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம்-4ன் அலுவலர்களின் மெத்தனப்போக்கை இம் முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம்-4ன் அலுவலர்களின் நடவடிக்கை உள்நோக்கத்துடனும், மருத்துவமனைக்கு உடந்தையாக செயல்பட்டு இருப்பதாக இம்முறை மன்றம் சுட்டிக்காட்ட விழைகிறது.

9. இருப்பினும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம்-4ன் உதவி ஆணையர் தன்னுடைய 17.8.23 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு இந்நேர்வு தொடர்பான வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழங்கும் தீர்ப்பின் அடிப்படையில், உரிய தொடர் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறை மன்றம் ஆணையிடுகிறது. மேலும் வெல்கேர் மருத்துவமனை தொடர்ந்த வழக்கினை விரைந்து முடிவு காண உரிய சட்ட நடவடிக்கையினை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரம் குறித்த அறிக்கையினை 45 தினங்களுக்குள் இம்முறை மன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம்-4ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04–ம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

ஒப்பம்/--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. சுந்தர் ராஜ், மஸ்தான் ரோடு, மணப்பாறை, மணப்பாறை வட்டம்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

2. ஆணையர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,, 58 பாரதிதாசன் சாலை,, கண்டோன்மெண்ட்
திருச்சிராப்பள்ளி

3. உதவி ஆணையாளர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
வார்டுகுழு அலுவலகம் – IV, திருச்சிராப்பள்ளி

4 நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது.//

செயலாளர்